## மூலிகைப்பயிர்களுக்கான உர அட்டவணை

**கற்றாழை**

கடைசி உழவின்போது எக்டருக்கு 10 டன் மக்கிய தொழுஉரம் இடவேண்டும். வளமான நிலங்களுக்கு தொழு எரு இட்டால் போதுமானது. தரிசு மற்றும் வளமில்லாத மண்ணிற்கு எக்டருக்கு 30 கிலோ தழைச்சத்து மற்றும் 120 கிலோ ஜிப்சம் உரத்தையும் அடியுரமாக இடுவது நல்லது. செடிகளை நட்ட 20வது நாளில் எக்டருக்கு 30 கிலோ தழைச்சத்து உரத்தை இடுவது அவசியம்.

**டிஜிட்டாலிஸ்**

அடியுரமாக எக்டருக்கு 10 டன் மக்கிய தொழுஉரம், 20 கிலோ தழைச்சத்து, 30 கிலோ மணிச்சத்து மற்றும் 30 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். மேலுரமாக 150 கிலோ தழைச்சத்தை 4 சம பங்காக பிரித்து 3 மாத இடைவெளியில் இடவேண்டும்.

**கண்வலிக்கிழங்கு**

ஒரு எக்டருக்கு 120 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து மற்றும் 75 கிலோ சாம்பல் சத்து தரவல்ல இராசயன உரங்களை இடவேண்டும. பாதி அளவு தழைச்சத்து உரத்தையும், முழு அளவு மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்களையும் அடியுரமாக இட்டு மீதிப்பாதி தழைச்சத்து உரத்தையும் இரண்டு சமபாகமாகப் பிரித்து கிழங்குகளை விதைத்த முதல் மாதத்திலும் இரண்டாவது மாதத்திலும் இடவேண்டும்.

**மருந்துக் கூர்க்கன்**

ஒரு எக்டருக்கு 15 டன் மக்கிய தொழுஉரம், 30 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து மற்றும் 50 கிலோ சாம்பல் சத்து உரங்களை செடிகள் நட்ட 30வது நாளிலும் பிறகு 45வது நாளிலும் சமமாகப் பிரித்து இடவேண்டும். நுண்ணூட்டசத்து பற்றாக்குறை உள்ள நிலங்களுக்கு எக்டருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் நுண்ணூட்டச்சத்து உரத்தை அடியுரமாக இடுவது அவசியம்.

**மருந்து வள்ளிக்கிழங்கு**

அடியுரமாக எக்டருக்கு 20 டன் மக்கிய தொழுஉரம், 300 கிலோ தழைச்சத்து, 150 கிலோ மணிச்சத்து மற்றும் 150 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். முழு அளவு சாம்பல் சத்து உரத்தை அடியுரமாகவும் தழைச்சத்து மற்றும் மணிச்சத்து உரங்களை நான்கு சமபாகமாகப் பிரித்து நடவு செய்த 2, 4, 6 மற்றும் 8ம் மாதங்களிலும் இடவேண்டும்.

**மருந்துக் கத்தரி**

ஒரு எக்டருக்கு 10 டன் மக்கிய தொழுஉரம், 25 கிலோ தழைச்சத்து, 40 கிலோ மணிச்சத்து மற்றும் 80 கிலோ சாம்பல் சத்து உரங்களை அடியுரமாக இடவேண்டும். செடிகளுக்கு இரண்டு மாதங்கள் கழித்து 25 கிலோ தழைச்சத்து உரத்தை மேலுரமாக இடவேண்டும்.

**நித்தியகல்யாணி**

ஒரு எக்டருக்கு 20 டன் மக்கிய தொழுஉரம், 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து மற்றும் 75 கிலோ சாம்பல் சத்து உரங்களை அடியுரமாக இடவேண்டும். செடிகளுக்கு இரண்டு மாதங்கள் கழித்து 50 கிலோ தழைச்சத்து உரத்தை மேலுரமாக இடவேண்டும்.

**பைரீத்தரம்**

அடியுரமாக ஒரு எக்டருக்கு 20 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து மற்றும் 50 கிலோ சாம்பல் சத்து உரங்களை இடவேண்டும். மேலுரமாக 20 கிலோ தழைச்சத்தை 2 சம பங்காக பிரித்து இடவேண்டும்.

**அவுரி**

ஒரு எக்டருக்கு 10-15 டன் மக்கிய தொழுஉரம், 80 கிலோ தழைச்சத்து, 40 கிலோ மணிச்சத்து மற்றும் 40 கிலோ சாம்பல் சத்து தரவல்ல இராசயன உரங்கள் இடவேண்டும். இவற்றில் 40 கிலோ தழைச்சத்து, முழு அளவு மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்களை அடியுரமாக இடவேண்டும். மறுபாதி 40 கிலோ தழைச்சத்தினை விதைத்த 40 நாட்கள் கழித்து இடவேண்டும்.

**திப்பிலி**

மண்ணை நன்றாக உழுது ஒரு எக்டருக்கு 20-25 டன் தொழு எரு இட்டுப் பண்படுத்தவேண்டும். ஒரு எக்டருக்கு 60 கிலோ தழைச்சத்து மற்றும் 80 கிலோ சாம்பல் சத்து தரவல்ல உரங்களை ஆண்டுக்கு இருமுறை சம அளவில் பிரித்து இடவேண்டும். முதலில் பாதியை அடியுரமாகவும் மீதியை செடிகள் நட்ட ஆறு மாதங்கள் கழித்தும் இடவேண்டும்.